அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 38/2016
தேதி: 15/02/2016

# ”மாற்றத்தை நோக்கி மக்கள் சந்திப்பு” கொங்கு மண்டலம் முதல் கட்ட சுற்றுப்பயணம் நிறைவு ச.ம.க தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிவிப்பு

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ 12.02.2016 வெள்ளிக்கிழமை முதல் கொங்கு மண்டலத்தில் தொடங்கிய **“மாற்றத்தை நோக்கி மக்கள் சந்திப்பு”** முதல் கட்ட சுற்றுப்பயணம் 4ஆம் நாளான இன்று(15.02.2016) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொடங்கி ஊட்டி, குன்னூர், கோத்தகிரி வழியாக கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம், புகளூர், அன்னூர், விளாங்குறிச்சி நேருநகர் வரையில் மேற்கொள்ளப்பட்டு நிறைவுற்றது.

நாளை(16.02.2016) சட்டமன்றப் பேரவை பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்க இருப்பதால் இரண்டாம் கட்ட சுற்றுப்பயணம் குறித்த விபரம் விரைவில் அறிவிக்கப்படும்.

துணை பொதுச் செயலாளர் என்.என்.சண்முகசுந்தரம் தலைமையில் 4 நாள்கள் இச்சுற்றுப்பயணத்தை கொங்கு மண்டலத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த மாவட்டச் செயலாளர்கள் ஈரோடு வடக்கு லாலா.கணேசன், ஈரோடு மாநகர் கிழக்கு ஆர்.சின்னசாமி, ஈரோடு மாநகர் மேற்கு ஏ.சிவகுமார், ஈரோடு தெற்கு கே.சீனிவாசன், திருப்பூர் மாநகர் ரத்னா ஜே.மனோகர், திருப்பூர் வடக்கு சித்திரைவேல் நீலகிரி சுதாகர், கோவை மாநகர் தெற்கு உபையது ரஹ்மான் கோவை வடக்கு பொன்னுசாமி, உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச்சுற்றுப்பயணத்தில் புரட்சித் திலகத்துடன் இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஆர்.ஜெயப்பிரகாஷ், கொள்கை பரப்புச் செயலாளர் திரு. என்.எம்.எஸ்.விவேகானந்தன், மாநில மகளிரணி துணைச் செயலாளர் திருமதி.எம்.பாகீரதி, மாநில கலை இலக்கிய அணிச் செயலாளர் திரு.பிரான்சிஸ் அந்தோனி ஆகியோர் பங்கேற்றனர்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்